எடுத்துக்கொள்ளவேண்டுமென்று நீதிமன்றத்தை வேண்டிக் கேட்டுக் கொண்டு இருக்கிறார் அரசாங்க வழக்கறிஞர். இந்தத் திட்டம் மத்திய அரசாங்கத்தின் பாதிப் பணத்தோடு நிறைவேறுகிற திட்டமாகும்.

Cauverippoompattinam

* 124 *Q.*—THIRU P. ETHIRAJ : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state whether there is any proposal to convert the Cauverippoompattinam sea-shore as a picnic place, and to construct a park in the sea-shore and to erect Karikalasholar's statue in that place ?

காவிரிப்பூம்பட்டினம் கடற்கரைப் பகுதி

திரு. பி. எத்திராஜ் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

காவிரிப்பூம்பட்டினம் கடற்கரைப் பகுதியில் அழகான பூங்கா அமைத்து அதில் கரிகாற் சோழ மன்னனின் சிலையையும் அமைத்து யாத்திரிகர் ஸ்தலமாக ஆக்குவதற்கு அரசினருக்கு உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இத்தகைய உத்தேசம் எதுவும் தற்போது இவ்வரசிடம் இல்லை.

திரு. பி. எத்திராஜ் : தலைவரவர்களே, இந்தக் காலத்தில் தமிழ் என்ற பெயரால் யார் யாருக்கோ சிலை வைக்கும்போது தமிழ்நாட்டின் மதிப்பை உயர்த்தும் வகையில் கல்லணையை கட்டி காவிரியைத் தஞ்சை மாவட்டத்தில் பாயச் செய்து நெற் களஞ்சியமாக ஆக்கிய அந்தப் பெரிய அரசனின் தலைநகரமாக விளங்கும் இடத்தில் அரசன் கரிகாலனுக்கு சிலை வைக்க இந்த அரசாங்கத்திற்கு ஏன் துணிவு வரவில்லை ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, கனம் உறுப்பினர் அவர்களின் மனப்பான்மையைப் பாராட்டுகிறேன். அப்படிப் பட்ட காரியம் விரைவில் நடைபெற அரசாங்கம் உத்தேசிக்கலாம்.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, உறையூரிலிருந்து காவிரிப்பூம்பட்டினத்தை உருவாக்கி பூம்புகார் என்ற பெயர் வைத்தவன் கரிகால் பெருவளத்தான். அவனுக்கு சிலை வைப்பது மாத்திரமல்ல கோவலன், கண்ணகி போன்ற வரலாற்று படைப்புகள் தோன்றிய இடமாகும். அது. அங்கு கண்ணகிக்குச் சிலை வைக்கப்போவதாகப் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் அறிக்கை கூட விட்டிருந்தார்கள். எப்போது இந்தச் சிலைகள் வைக்கப்படும்.?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : கண்ணகிக்கு சென்னையில் சிலை வைக்கப்பட்டிருக்கிறது. பூம்புகாரில் சிலை வைக்க முயற்சிகள் மேலும் நடைபெறலாம். உறுதியாகச் சொல்லுவதற்கில்லை.

DR. M.A. MUTHIAH CHETTIAR : Will the Hon. Minister be pleased to state whether they will make Cauverippoompattinam a sea-side resort like Mahabalipuram ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அப்படிப்பட்ட உத்தேசம் இதுவரையில்லை. மேலும் அதைப் பற்றி சிந்தித்து உரிய நடவடிக்கைகளை எடுக்கலாம் என்று கருதுகிறேன்.

Nationalisation of Cinema Industry

* 125 *Q.*—THIRU P. ETHIRAJ : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state whether there is any proposal to nationalise the cinema industry and the cinema theatres ?